OS.60/2022

நாள். 16.04.2026.

வா.சா. 1 – ஆனந்தன்

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:–</u>

நாங்கள் பாகம்கேட்டு வழக்கு போட்டுள்ளோம். எத்தனை இலக்க சொத்துக்களுக்கு வழக்கு போட்டுள்ளோம் என்றால் 5 இலக்க சொத்துக்கள். வழக்கு தாக்கல் செய்வதற்கு வழக்கறிஞருக்கு விவரம் சொன்னது நானா என்றால் ஆமாம். 5 இலக்க சொத்துக்கள் யாருக்கு பாத்தியம் என்றால் என் அம்மாவின் அப்பாவானா முனியாண்டி சம்மாட்டி. முனியாண்டி சம்மாட்டியின் அப்பா பெயர் செல்லப்பன் சம்மாட்டி என்றால் சரிதான். செல்லப்பன் சம்மாட்டிக்கு முனியாண்டி சம்மாட்டியும், முத்துக்கருப்பன் சம்மாட்டியும் ஆண்மக்கள் என்றால் சரிதான். முனியாண்டி சம்மாட்டிக்கு செல்லாயி என்ற செல்லம்மாள், ராஜம்மாள், பிரதிவாதி ஆண்டி ஆகியோர்கள் மக்கள் என்றால் சரிதான். செல்லம்மாளுக்கு 1ம் வாதி ஆதிலெட்சுமி, ஆறுமுகம், மற்றும் நான் மக்கள் என்றால் சரிதான். ஆறுமுகத்திற்கு உமாமகேஸ்வரி, அகிலாண்டேஸ்வரி, அபிராமி, அங்கையர்கன்னி, அருள்முருகன் (2 முதல் 6 வாதிகள்) மக்கள் என்றால் சரிதான். ஆதிலெட்சுமி வழக்கு தாக்கல் செய்த பிறகு இறந்துவிட்டார் என்றால் சரிதான். ஆதிலெட்சுமியின் கணவர் பெயர் நாகுசாமி என்றால் சரிதான். ஆதிலெட்சுமியின் மகள்தான் திவ்யபாரதி என்றால் சரிதான். நாகுசாமி மற்றும்திவ்யபாரதி இவ்வழக்கில் 14 மற்றும் 15 பிரதிவாதிகளாக உள்ளனர் என்றால் சரிதான். ராஜம்மாளின் கணவர் பெயர் முத்துராக்கு. முத்துராக்கு தற்போது உயிரோடு இல்லை. ராஜம்மாள் மற்றும் முத்துராக்குவின் மக்கள்தான் ராஜேந்திரன், கருணாநிதி, சாந்தி, மல்லிகா, ஜெயலெட்சுமி, ஆறுமுகம் ( 8 முதல் 13 வாதிகள்) என்றால் சரிதான். நான் இந்த வழக்கில் 7ம் வாதி என்றால் சரிதான். தாவா 1ம் இலக்க சொத்தின் சர்வே எண் என்ன என்றால் பழைய சர்வே எண்.80/1, 80/2, 80/3, 80/4 புதிய சர்வே எண் தெரியாது. தாவா 1ம் இலக்க சொத்தின் மொத்த விஸ்தீரணம் 5 ஏக்கர் 96 சென்டு. 1ம் இலக்க சொத்து முழுவதும் ஒரே பரப்பாக உள்ளது என்றால் சரிதான். சர்வே எண்கள்.80/1, 80/2, 80/3, 80/4 சொத்துக்கு யார் பெயரில் பட்டா உள்ளது என்றால் முனியாண்டி சம்மாட்டி. முனியாண்டி சம்மாட்டி பெயரில் உள்ள

பட்டா என்கைவசம் உள்ளதா என்றால் இல்லை. 5 ஏக்கர் 96 சென்டுக்கு வடக்கே யார் சொத்து உள்ளது என்றால் ஊரணியும், வண்டிப்பாதையும் உள்ளது. தெற்கே ஒரு முஸ்லீம் பெண்ணுக்கு சொந்தமான சொத்து உள்ளது. கிழக்கே ஒரு நாடாருக்கு சொந்தமான நிலமும், மேற்கே ஒரு முஸ்லீமுக்கு சொந்தமான நிலமும் உள்ளது. தாவா 1ம் இலக்க சொத்து முழுவதும் விவசாய நிலம். அதில் விவசாயம் செய்து வருகிறோம் என்றால் சரிதான். யார்யார் விவசாயம் செய்து வருகிறோம் என்றால் முனியாண்டியின் மக்கள் செல்லாயி என்ற செல்லம்மாள், ராஜம்மாள், பிரதிவாதி ஆண்டி. முனியாண்டி சம்மாட்டி 1986ல் இறந்து பின்பு அவரது மக்கள் மேற்படி 3 பேரும் விவசாயம் செய்து வருகிறார்கள். கடைசியாக 1ம் இலக்க சொத்தை பார்த்தேனா என்றால் பார்த்தேன். அந்த இடம் காலியாக உள்ளது. தாவா 1ம் இலக்க சொத்திற்கு நான்குமால் போடாதற்கு காரணம் என்னவென்றால் சர்வே எண்கள் சொல்லப்பட்டதால் நான்குமால் சொல்லப்படவில்லை. தாவா 1ம் இலக்க சொத்திற்கு முனியாண்டி சம்மாட்டியின் மக்கள் பெயரில் பட்டா கிடையாது என்றால் சரிதான். தாவா 1ம் இலக்க சொத்தில் சர்வே எண்.80/1 ஐ தவிர மற்ற மீதமுள்ள 3 சர்வே எண்களுக்கும் 2004ம் ஆண்டு பிரதிவாதி பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் 10(1) சிட்டா பிரதிவாதி பெயரில் உள்ளது என்றால் சரிதான். பிரதிவாதி ஆண்வாரிசு என்பதால் அவர் பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளது. சாட்சியிடம் காண்பிக்கப்பட்ட 10(1) சிட்டா **பி.வா.சா.ஆ.1**. தாவா 1ம் இலக்க சொத்து முனியாண்டி சம்மாட்டிக்கு எப்படி பாத்தியம் என்றால் அவருக்கு பூர்வீக பாத்தியம். முனியாண்டி சம்மாட்டியின் மகள் செல்லாயி என்ற செல்லம்மாள் எப்போது இறந்தார் என்றால் 18.01.1988. தாவா 1ம் இலக்க சொத்து முனியாண்டி சம்மாட்டியின் பூர்வீக சொத்து என்பதால் அவரது பெண்மக்களான செல்லாயி என்ற செல்லம்மாளுக்கும், ராஜம்மாளுக்கும் எந்த பாத்தியமும் இல்லை என்றால் சரியல்ல. அதனால்தான் தாவா 1ம் இலக்க சொத்துக்கு பிரதிவாதி பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் சரிதல்ல. முனியாண்டி சம்மாட்டி இறந்த பிறகு அவரது பெண்மக்களான செல்லாயி என்ற செல்லம்மாளோ, ராஜம்மாளோ 1ம் இலக்க சொத்தை அனுபவம் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா 1ம் இலக்க சொத்தில் சர்வே எண்.80/1 யார் அனுபவத்தில் உள்ளது என்றால் வாதிகள் மற்றும் பிரதிவாதி அனுபவத்தில் உள்ளது. 1ம் இலக்க சொத்தில் சர்வே எண்.80/1 ஐ பொறுத்து

உம்மூல் ஹபீபா என்பவர் இராமநாதபுரம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் O.S.295/1988 என்ற வழக்கு தாக்கல் செய்து அந்த வழக்கு அவருக்கு சாதகமாக தீர்ப்பாகிவிட்டது என்றால் சரிதான். சர்வே எண்.80/1 எங்கள் அனுபவத்தில் இருப்பதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. தாவா 1ம் இலக்க சொத்தில் சர்வே எண்.80/1 சொத்தானது உம்மூல் ஹபீபா அனுபவத்தில் உள்ளது என்றும், சர்வே எண்கள் 80/2 முதல் 80/4 வரையிலான சொத்துக்கள் பிரதிவாதியின் அனுபவத்தில் உள்ளது என்றும், நான் வழக்கிற்காக வாதிகள் மற்றும் பிரதிவாதியின் கூட்டு அனுபவத்தில் இருப்பதால் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அதனால்தான் வழக்குரை தாக்கல் செய்யும்போதோ, நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்யும்போதோ தாவா 1ம் இலக்க சொத்துக்குரிய ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா 2ம் இலக்க சொத்தின் சர்வே எண்கள்.112/6 மற்றும் 17/11. அதன் மொத்த விஸ்தீரணம் 60 ½ சென்டு. அந்த சொத்து யாருக்கு ஆதியில் பாத்தியம் என்றால் என் தாத்தா முனியாண்டி சம்மாட்டி கிரையம் வாங்கிய சொத்து. எந்த வருடம் கிரையம் பெற்றார் என்றால் 1957ம் ஆண்டு. தாவா 2ம் இலக்க சொத்துக்கு பட்டா செல்லாயி என்ற செல்லம்மாள் மற்றும் ராஜம்மாள் பெயரில் உள்ளது என்றால் சரிதான். செல்லாயி என்ற செல்லம்மாள் மற்றும் ராஜம்மாள் இறந்த பிறகு பட்டா பிரதிவாதி பெயருக்கு மாறிவிட்டது என்றால் சரிதான். அவர் ஆண் வாரிசு என்பதால் மாறிவிட்டது. என்னிடம் காட்டப்படும் 10(1) சிட்டா பிரதிவாதி ஆண்டி பெயரில் 2ம் இலக்க சொத்துக்கு உள்ளது என்றால் சரிதான். அந்த 10(1) சிட்டா **பி.வா.சா.ஆ.2**. UDRன் போது தாவா 2ம் இலக்க சொத்துக்கு பிரதிவாதி பெயரில் பட்டா மாறுதல் ஏற்படுவதற்கு செல்லாயி என்ற செல்லம்மாளும், ராஜம்மாளும் ஆட்சேபனை செய்யவில்லை என்பதால்தான் மாறியுள்ளது என்றால் சரியல்ல. தாவா 2ம் இலக்க சொத்துக்குரிய பட்டா 1986ம் ஆண்டில் பிரதிவாதியின் பெயருக்கு ஏற்பட்டு பட்டா ஏற்பட்டது முதல் அவர் தனித்து அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. தாவா 3ம் இலக்க சொத்து முனியாண்டி சம்மாட்டிக்கோ, முத்துகருப்பன் சம்மாட்டிக்கோ பாத்தியப்பட்ட சொத்து இல்லை என்றால் தவறு, முத்துக்கருப்பன் சம்மாட்டியிடமிருந்து முனியாண்டி சம்மாட்டி கிரையம் பெற்றுள்ளார். தாவா 3ம் இலக்க சொத்து அரசுக்கு பாத்தியப்பட்ட புறம்போக்கு சொத்து என்றால் சரிதான். தாவா 3ம் இலக்க சொத்துக்கு

முனியாண்டி சம்மாட்டி, முத்துகருப்பன் சம்மாட்டி மற்றும் அவர்களது வாரிசுகள் பெயரில் பட்டா இதுவரை ஏற்படவில்லை என்றால் சரிதான். ஆனால் தாவா 3ம் இலக்க சொத்துக்கு பிரதிவாதியின் மகன் முனீஸ்குமார் பெயரில் B Memo வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அந்த சொத்தில் முனீஸ்குமார் வீடுகட்டி அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. தாவா 3ம் இலக்க சொத்து அரசுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்பதால் அந்த சொத்தில் பாகம்கோரி தாக்கல் செய்துள்ள இவ்வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. தாவா 4ம் இலக்க சொத்து முனியாண்டி சம்மாட்டி மற்றும் முத்துக்கருப்பன் சம்மாட்டி ஆகிய இருவருக்கும் வா.சா.ஆ.1 பாகஆவணம் மூலம் கூட்டாக கிடைத்த சொத்து என்றால் சரிதான். 4ம் இலக்க சொத்துக்கும் பிரதிவாதி பெயரில் தனிபட்டா ஏற்பட்டு அவர் தனித்த அனுபவத்தில் இருந்து வருகிறார் என்றால் பட்டா மட்டும் அவரது பெயரில் உள்ளது, ஆனால் எங்கள் கூட்டு அனுபவத்தில் இருந்து வருகிறது. என்னிடம் காட்டப்படும் நத்தம்நிலவரிதிட்ட துாயசிட்டா பிரதிவாதி பெயரில் உள்ளது என்றால் சரிதான். அந்த நத்தம்நிலவரிதிட்ட துாய சிட்டா நகல் **பி.வா.சா.ஆ.3**. தாவா 5ம் இலக்க சொத்துக்கு சர்வே எண் என்னவென்றால் தெரியாது. தாவா 5ம் இலக்க சொத்துக்கு யார் பெயரில் பட்டா உள்ளது என்றால் தெரியாது. 5ம் இலக்க சொத்து வீட்டடிமனை. 5ம் இலக்க சொத்து முனியாண்டி சம்மாட்டிக்கு பாத்தியம் என்பதை காட்ட எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. முனியாண்டி சம்மாட்டியின் பெண்மக்களான செல்லாயி என்ற செல்லம்மாளும், ராஜம்மாளும் முறையே 1988 மற்றும் 2017ம் ஆண்டுகளில் இறக்கும்வரை தாவா 1, 2, 4, 5 சொத்துக்களில் பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பிரதிவாதிதான் அவரது சகோதரிகளான செல்லாயி என்ற செல்லம்மாள் மற்றும் ராஜம்மாள் ஆகீயோர்களையும், அவரது வாரிசுகளையும் பார்த்துக்கொண்டதால் பிரதிவாதி பெயரில் பட்டா மாறுதல் செய்வதற்கு சம்மதம் தெரிவித்ததின் அடிப்படையில் பட்டா மாறியுள்ளது என்றால் சரியல்ல. பிரதிவாதி 1, 2, 4, 5 இலக்க சொத்துக்களை 2004ம் ஆண்டு முதல் அவரது சகோதரி மற்றும் சகோதரியின் வாரிசுகளை நீக்கி தனித்து அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் தாவா 1, 2, 4, 5 இலக்க சொத்துக்கள் வாதிகள் மற்றும் பிரதிவாதியின் கூட்டு அனுபவத்தில் எப்போதும் இருந்து வரவில்லை

என்றால் சரியல்ல. கூட்டு அனுபவத்தில் இருப்பதாக வழக்குரையில் கூறி தமிழ்நாடு நீதிமன்ற கட்டணங்கள் மற்றும் வழக்கு மதிப்பீட்டு சட்டம் பிரிவு 37(2)ன் கீழ் நீதிமன்ற கட்டணம் செலுத்தி வழக்கு தாக்கல் செய்திருப்பது நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வாதிகளாகிய எங்களுக்கு நாங்கள் கேட்கும் பாகம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

Sd/-சி.மோகன்ராம்,

கூடுதல் மாவட்ட நீதிபதி,

இராமநாதபுரம்.